

நேற்று (05.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் 21.10.2023 மற்றும் 22.10.2023 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டிக்காக "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை போட்டி நடத்தும் அமைப்பாளர்களிடம் சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி, போட்டிக்கான கோப்பை, இலச்சினை மற்றும் டீ–ஷர்ட்களை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி 04.10.2023 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 7 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 1 தட்டச்சர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன் ஆகியோர் உள்ளனர்.

### புற்றுநோய் சிகிச்சைக்காக,

# பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து நிவாரணம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. க்கு பிரதமர் அலுவலகம் கடிதம்!

புதுடெல்லி, அக். 6 –

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள், சென்னை நந்தம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த ஏழுமலை மற்றும் சென்னை நெற்குன்றம் பகுதியைச் சேர்ந்த வேதகிரி ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு முறையே 19.05.2023 மற்றும் 22.05.2023 ஆகிய தேதிகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் தனித் தனியே கடிதங்கள் எழுதியிருந்தார்.

டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், ஏழுமலை மற்றும் வேதகிரி ஆகிய இருவரின் புற்றுநோய் சிகிச்சைக் களுக்காகவும் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பிரதமர்



நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர்.பாலு எம்.பி. க்கு, 05.06.2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரம் பின் வருமாறு:

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, ஏழுமலை மற்றும் வேதகிரி ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காகவழங்கப்படும் உதவித் தொகையான தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயானது, பயனாளர்கள் சிகிச்சை பெறும் சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மையத்திற்கு வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலை பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்குறிப்பிட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அறிவிப்பு!

# 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் வேலைவாய்ப்பு!

## உறுப்பினர் செயலர் வேண்டுகோள்!

சென்னை, அக். 6 -

3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் வேலைவாய்ப்பு பெறுவது தொடர்பாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் வேண்டுகோள் விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:

தமிழ்நாட்டில் விளையாட்டு மற்றும் விளையாட்டு வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகள் / திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் சார்பாக ஒலிம்பிக் மற்றும் பிற சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்களை ஊக்குவித்திடும் வகையில் அவர்களுக்கு அரசுத் துறைகள் / பொதுத் துறை நிறுவனங்களில் (PSUs) 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுவருகிறது.

இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெறுவதற்கு கீழ்காணும் விளையாட்டுப் போட்டிகளில் 01.01.2018 அன்றோ அல்லது அதன் பிறகு பெற்ற சாதனைகள் தகுதியானவையாக கருதப்படும்.

சர்வதேச போட்டிகள் (வெற்றிபெற்றவர்கள் / பங்கேற்றவர்கள்)

- கோடைக்கால ஒலிம்பிக் விளை யாட்டுப் போட்டிகள்,
- காமன்வெல்த் விளை யாட்டுபோட்டிகள்
- ஆசிய விளையாட்டுப்போட்டிகள்
- சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் (IOC) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பால் (ISF) 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது ஆண்டு தோறும் நடத்தப்படும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகள்

4 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது ஆண்டுக்கு ஒருமுறை, IOC ஆல் அங்கீகரிக்கப்பட்ட ISF இன் கீழ் நடத்தப்படும் காமன்வெல்த் சாம்பியன்ஷிப்கள் போட்டிகள்

- 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது IOC ஆல் அங்கீகரிக்கப்பட்ட ISF இன் கீழ் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஆசிய சாம்பியன்ஷிப்கள் போட்டிகள்
- சர்வதேச பார்வையற்றோர் விளையாட்டு சங்கம் (IBSA) காது கேளாதோருக்கான சர்வதேச விளையாட்டுக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக விளையாட்டுகள் மற்றும் காது கேளாதோர் விளையாட்டுகள்.

தேசிய அளவிலான போட்டிகள் (வெற்றிபெற்றவர்கள் மட்டும் )

- தேசிய விளையாட்டுப்போட்டிகள்,
- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளால் நடத்தப்படும் தேசிய சாம்பியன்ஷிப் விளையாட்டுப்போட்டிகள்

மாநில அளவிலான சாம்பியன்ஷிப்போட்டிகள்

(வெற்றிபெற்றவர்கள் மட்டும் )

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் (SDAT) அங்கீ கரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்கள் நடத்தும் சீனியர் அளவிலான மாநில சாம்பியன் ஷிப் போட்டிகள் மட்டுமே தகுதியான போட்டிகளாக கருத்தப்படும்.

மேலும் 40 வயதிற்குட்பட்டவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற இயலும். விண்ணப்பதாரர் வேலைவாய்ப்பு பெற்றிடுவதற்கான இதர முழு தகுதிகளும் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ்நாட்டினை சார்ந்த விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் மேற்காணும் வழிகாட்டுதலின்படி 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்பு பெறுவதற்கான விண்ணப்பங்கள் www.sdat.tn.gov.in எனும் இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. தகுதியான விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து உரிய இணைப்புகளுடன் 31.10.2023ம் தேதி மாலை 5.00 மணிக்குள் மேற்காணும் இணையதள முகவரி அல்லது நேரு விளை யாட்டரங்கில் இயங்கிவரும் தலைமை அலுவலகத்தில் நேரிலும் விண்ணபித்திடுமாறு தெரிவித்துகொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவொற்றியூர் நகரக் கழக முன்னாள் அவைத்தலைவர், மூன்று முறை நகராட்சி மன்ற உறுப்பினர் கே.பரசுராமன் அவர்களின் 31 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி கே.வி.கே.குப்பத்தில் உள்ள தியாகச்சுடர் கே.பரசு ராமன் நினைவு கலையரங்கம் அருகில் வட்டக் கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் வரவேற்பில், கழக மீனவர் அணி துணைத் தவலைர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கலந்து கொண்டு தூய்மைப் பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள், ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். இதில் கழகத்தினர் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாட்டில் வகுப்புவாதக் கலவரங்களுக்குத் தூபம் போடும்

# பிரதமர் மோடியின் கனவு பலிக்காது!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம்!

சென்னை, அக். 6 -

"தமிழ்நாட்டில் வகுப்புவாதக் கலவரங்களுக்குத் தூபம் போடும் பிரதமரின் கனவு என்றைக்கும் பலிக்காது" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம் தெரிவத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தென் மாநிலங்களில் இந்து கோயில்களை மாநில அரசாங்கம் வலுக்கட்டாயமாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது, கோயில் சொத்துகளையும், அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தையும் முறைகேடாக பயன்படுத்தி வருகிறது, இது ஒரு அநீதி. ஜாதிவாரிய மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக உரிமை எழுப்பும் காங்கிரஸ் கட்சி கோயில்களை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்துமா ? என்று தெலுங்கானாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி தேவையற்ற சர்ச்சையை எழுப்பியிருக்கிறார். இந்தியாவில் மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட தமிழ்நாட்டில் கோயில் நிர்வாகம் என்பது இந்து சமய அறநிலையத்துறை என்ற அமைப்பின் மூலம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1927 ஆம் ஆண்டிலேயே சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1951 லும், பிறகு 22 ஜனவரி 1959 இல் இந்து சமய அறநிலையத்துறை சட்டம் கொண்டு வரப்பட்டு தமிழகத்திலுள்ள கோயில்கள் அனைத்தும் அரசுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.



#### பிரதமர் அறிந்திருக்க வாய்ப்பில்லை!

இத்தகைய நிர்வாகத்தின் மூலம் கோயில்கள் என்பது யார் வேண்டுமானாலும் உள்ளே சென்று கடவுளை தரிசிக்கவும், வழிபடவும் முழு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. 1931 ஆம் ஆண்டிலேயே ஆலயங்களில் அரிஜன பிரவேசம் மறுக்கப்பட்ட போது மதுரை வைத்தியநாத ஐயர் மீனாட்சி அம்மன் கோயிலில் தியாகி கக்கன் உள்ளிட்ட அரிஜனங்களை அழைத்துக் கொண்டு போராட்டம் நடத்திய வரலாற்றை பிரதமர் மோடி அறிந்திருக்க வாய்ப்பில்லை.

தமிழ்நாட்டில் நீண்ட நெடுங்காலமாக இராமானுஜர், வள்ளலார், தந்தை பெரியார் ஆகியோர் சமய சீர்திருத்த கருத்துகளை பரப்பி, கோயில்களில் வழிபாட்டு உரிமையை பெற்றுத் தந்த வரலாற்றுப் பெருமை தமிழகத்திற்கு உண்டு. அந்த அடிப்படையில் தமிழகத்தில் உள்ள கோயில்களில் எந்த பாகுபாடும், தவறுகளும், தனிப்பட்ட சிலருடைய ஆதிக்கத்தையும் தடுத்து நிறுத்துகிற வகையில் இந்து சமய அறநிலையத்துறை இந்தியாவிற்கே முன்மாதிரியாக செயல்பட்டு வருகிறத.

பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த போது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக தலித் சமுதாயத்தைச் சேர்ந்த பி. பரமேஸ்வரன் அவர்களை நியமித்து புரட்சி செய்ததை எவரும் மறந்திட இயலாது. அத்தகைய நியமனத்தின் மூலம் எந்த கோயில்களில் நுழைய எந்த சமுதாயம் மறுக்கப்பட்டதோ, அதே சமுதாயத்தைச் சேர்ந்தவரை அமைச்சராக நியமித்து கோயில்களில் அவருக்கு பரிவட்டம் கட்டி வரவேற்ற காட்சியை பார்த்து நாடே மகிழ்ந்தது. இந்து மதத்திற்குள்ளாக இருந்த ஜாதிய ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, சனாதன அணுகுமுறையை புறக்கணிக்கிற பணியை தமிழகம் நீண்ட காலமாக செய்து வருகிறது.

#### இந்து கோவில்களில் ஆன்மீகப் புரட்சி!

தமிழகத்தைப் பொறுத்தவரை முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக பி.கே. சேகர் பாபு அவர்கள் நியமிக்கப்பட்டு இந்து கோயில்களில் ஒரு ஆன்மீகப் புரட்சியே நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் 36,425 கோயில்களும், 56 மடங்களும், ஏறத்தாழ 5 லட்சம் ஏக்கர் நிலங்களையும் இன்றைக்கு இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறது.

இவர் அமைச்சராக பொறுப்பேற்று கடந்த 2 ஆண்டுகளில் தனியார் வசமிருந்து ரூபாய் 5137 கோடி மதிப்புள்ள கோயில்கள் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் குடமுழுக்குகள், வருமானம் இல்லாத கோயில்கள் அனைத்திலும் ஒருகால பூஜை நடத்துவதற்கு நிதியுதவியும், எல்லாவற்றுக்கும் மேலாக தந்தை பெரியாரின் கனவை நினைவாக்குகிற வகையில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் வகையில் பெண்கள் உள்ளிட்ட பலர் ஓதுவார்களாக நியமிக்கப்பட்டிரு க்கிறார்கள். கோயிலின் கர்ப்பகிரகத்திற்குள் நுழையக் கூடாது, கோயில் கொடி மரத்தை தாண்டி உள்ளே செல்லக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட்டு கோயிலுக்குள் அனைத்து ஜாதியினரும் வேறுபாடின்றி உள்ளே நுழைந்து வழிபடுகிற உரிமையை பறிக்கிற வகையில் பிரதமர் மோடி பேசியிருப்பது கடுமையான கண்டனத்திற்குரியது. இத்தகைய அநீதிகள் எல்லாம் கோயில்கள் ஒரு சில தனியாரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த போது நடைபெற்றது.

#### பிரதமர் உணர வேண்டும்!

சில நூறு ஆண்டுகளுக்கு முன்பாக சிதம்பரம் நடராஜர் கோயிலில் கடவுளை தரிசிக்க நந்தனாருக்கு அனுமதி மறுக்கப்பட்ட போது, அதற்காக தீக்குளித்து உயிர் நீத்த வரலாறு தமிழகத்தில் நிகழ்ந்திருப்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தகைய மாபெரும் புரட்சியை ஒட்டித் தான் இன்றைக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து கோயில்களும் அனைவருக்கும் பொதுவாக செயல்பட்டு வருகிறது என்பதை பிரதமர் மோடி உணர வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், சிறுபான்மையினர் நடத்தும் வழிபாட்டுத் தலங்களை ஏன் அரசு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவில்லை என்று பிரதமர் மோடி கேள்வி எழுப்பியிருக்கிறார். கோயில்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை இருப்பதைப் போல, பள்ளிவாசல் மற்றும் தர்காக்களுக்கு வக்பு வாரியம் என்ற அரசுத்துறை உண்டு. இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் போல இதற்கும் அமைச்சர் உண்டு. தற்போது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக சேகர்பாபு இருப்பதை போல வக்பு வாரிய துறைக்கு செஞ்சி மஸ்தான் இருக்கிறார். இதற்கென செயலாளராக தனி ஐ.ஏ.எஸ். அதிகாரி உள்ளிட்ட உறுப்பினர்கள் செயல்பட்டு அனைத்து பள்ளிவாசல் மற்றும் தர்காக்களை நிர்வகித்து வருகின்றனர். சமயத்தின் அடிப்படையில் இங்கே என்ன பாரபட்சம் உள்ளது என்பதை பிரதமர் மோடி உணர வேண்டும்.

இந்தியாவிலேயே அமைதி பூங்காவாக இருக்கிற தமிழ்நாட்டில் மதமாச்;சர்யங்களை உருவாக்கி, வகுப்புவாத கலவரங்களுக்கு தூபம் போட்டு பா.ஜ.க.வை வளர்த்துவிடலாம் என்ற பிரதமர் மோடியின் கனவு என்றைக்கும், எந்த காலத்திலும் நிறைவேறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வாறு கே.எஸ்.அழகிரி தமதுஅறிக்கையில் கூறியுள்ளார்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி அனகாபுத்தூர் பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண பெற்ற மாணவ மாணவிகளுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி முதல் இடம் பிடித்த 10.ஆம் 12ஆம் வகுப்பு மாணவிகளுக்கு ரூபாய் 10,000 இரண்டாம் இடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு தலா ரூபாய் 7,000 மூன்றாம் இடம் பிடித்த மூன்று மாணவ மாணவிகளுக்கு தலா 5000 ரூபாய் என தனது சொந்த நிதியிலிருந்து மாணவ மாணவிகளுக்கு சால்வை அணிவித்து வாழ்த்தி ஊக்கத்தொகை வழங்கினார் . நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் பகுதி கழகச் செயலாளர் வே.கருணாநிதி, சுகாதார குழு தலைவர் மாநகரத் துணைச் செயலாளர் நரேஷ் கண்ணா, பகுதி செயலாளர் திருநீர்மலை ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர்கள், பள்ளி தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் ஆகியோர் நிகழ்ச்சி பங்கேற்ற சிறப்பித்தார்கள்.